**செய்தி வெளியீடு எண்:530** **நாள்:15.11.2016**

திருக்கோயில்கள் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகள், திருப்பணி மேற்கொள்ளுதல், கலைப் பொக்கிஷங்கள், பண்பாட்டு சின்னங்கள் பராமரித்தல் ஆகியவை தொடர்பாக வல்லுநர்களின் கருத்துரு பெற்று முறையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக பல்வேறு துறைகளில் அனுபவம் வாய்ந்த நபர்களிடமிருந்து விருப்பம் கோரும் விண்ணப்பங்களை (Expression of Interest) துறையின் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து **15.11.2016–க்குள்** விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது திருக்கோயில் தொடர்புடைய மேலும் பல்வேறு துறை வல்லுநர்களை பட்டியலில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளதால் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய கடைசி தேதி **15.12.2016** என நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட பொருள் குறித்து விருப்பம் தெரிவிக்க உள்ளோர் **15.12.2016** வரை விண்ணப்பத்தினை www.tnhrce.org என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**